**பீசீசீ லங்கா லிமிட்டட் – 2017/2018**

பீசீசீ லங்கா லிமிட்டட்டின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 49,304,291 கிரயமுடைய சொத்துக்களது பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம், கம்பனியின் வியாபார நடவடிக்கைகளினாலான இலாபத்தை கணிப்பிடுகையில் வட்டி வருமானத்தை ஏனைய வருமானமாக கருதியமையால் மீளாய்வாண்டினது வருமான வரிச் செலவினம் ரூபா 1,393,577 குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக, இலாபமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 1,420,474 கடன் பட்டோர் மீதி மற்றும் ரூபா 4,577,421 கடன் கொடுத்தோர் மீதி என்பன தொடர்பான மீதிகள் உறுதிப்படுத்தப்படாதும் ஏனைய தொடர்புடைய சான்றுகள் இல்லாதும் இருந்தமையால் அவை உள்ளனவா என்பதையும் சரியானவையா என்பதையும் பரிசீலிக்க முடியவில்லை.

(ஈ) பன்னிரண்டு ஆண்டுகளாக நிலவி வருவதும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுவதுமான ரூபா 58,111,396 கூட்டுத் தொகையுடைய புரள்வு வரி, பாதுகாப்பு வரி, பண்டங்கள், சேவை வரி, தீர்வையும் வரிகளும், பெறுமதி சேர் வரி என்பவற்றினது மீதிகளுக்குப் போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவை சரியானவையா என்பதையும் அவற்றினது விசுவாசத்தையும் உறுதி செய்ய முடியவில்லை.

(உ) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு ரூபா 4,508,696 கொடுப்பனவு செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய மீதி காட்டப்பட்டிராததுடன், இம்மீதி சரியானதா என்பதை உறுதி செய்வதற்கு வேறு சான்றுகள் மாற்றீடாகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால், கொடுப்பனவு செய்ய வேண்டிய இம் மீதி கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக விளங்கியது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகக் காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட பீசீசீ லங்கா லிமிட்டட்டின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் என்னால் தெரிவிக்கப்படுகின்றன.

(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரம்புக்குட்படுத்தலும் மேற்கூறியவாறு அமையும்.

(ஆ) எனது கணக்காய்வு அபிப்பிராயத்தின் பிரகாரம்,

- கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விடயங்களுக்கான விளக்கம் என்னால் பெறப்பட்டதென்றும், எனது பரிசீலனைகளின் மூலம் தோற்றும் விதத்தில் கம்பனி போதியளவு கணக்கீட்டு அறிக்கைகளையும் ஏடுகளையும் பேணியுள்ளதென்றும்,

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனியின் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காணப்படும் தேவைக்கேற்பவுள்ள தென்பதும் எனது அபிப்பிராயமாகும்.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவின் (ஏ) மற்றும் (பீ) | நிதியாண்டு முடிவுற்று 06 மாதங்களுக்குள் பணிப்பாளர் சபை பங்குதாரர்களுடன் வருடாந்த மாநாட்டை நடாத்த வேண்டுமாயினும், 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த மாநாடுகள் நடாத்தப்படவில்லை. |
| (ஆ) கம்பனி அமைப்பு அகவிதிகளது 78 ஆம் பிரிவு | கம்பனியின் பணிப்பாளர் சபையில் 07 அங்கத்தவர்கள் இருக்க வேண்டியபோதும், 05 அங்கத்தவர்கள் மாத்திரமே இருந்தனர். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | விபத்துக்குள்ளான கம்பனியின் லொறி ஒன்றைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 86,800 செலவிடப்பட்டிருந்தபோதும், காப்புறுதி இழப்பீடாக ரூபா 55,800 மாத்திரமே பெறப்பட்டிருந்தது. கம்பனிக்கு ஏற்பட்ட ரூபா 31,000 இழப்பு சம்பந்தமாகப் பொறுப்பானவர்களைக் கண்டறிவதற்கு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 110 | இழப்புகள், நட்டங்கள் தொடர்பாகப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 4.2.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டின்போது 04 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தன. இதன் காரணமாக, சுற்றறிக்கைப் பிரகாரம் கம்பனியின் செயலாற்றல் மாதாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை. |
| (ii) | 5.2.1 ஆம் பந்தி | கம்பனியின் கணக்கீட்டு ஆண்டு 2017 ஏப்ரல் 01 தொடக்கம் 2018 மார்ச் 31 வரையானதாகும். அதனால் அக்காலப்பகுதிக்கான பாதீடு தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 2017 சனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதிக்கான பாதீடே தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 8.2.2 ஆம் பந்தி | மிகையாக உள்ள பணத்தை முதலீடு செய்கையில் நிதி அமைச்சினதும் தொடர்புடைய அமைச்சினதும் இணக்கம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 85,619,918 முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிப் பெறுபேறு ரூபா 1,471,934 நிகர இலாபமாகும். இதற்கொப்பான கம்பனியின் முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 21,687,425 ஆகும். இதனால் முன்னைய ஆண்டைவிட மீளாய்வாண்டில் நிகர இலாபம் ரூபா 20,215,491 நலிவுக்குள்ளாகியிருந்தது. மீளாய்வாண்டின்போது ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 15,361,818 குறைவடைந்தும் நிர்வாகச் செலவினம் ரூபா 8,108,064 அதிகரித்தும் இருந்தமை மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

| விகிதம் | 2016/2017 | 2017/2018 |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம், நூற்றுக்கு | 8 | 4 |
| நிகர இலாப விகிதம், நூற்றுக்கு | 16 | 1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த இலாப விகிதம் 4 சதவீதத்தாலும் நிகர இலாப விகிதம் 15 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. தேங்காய் எண்ணெய்யின் கொள்வனவு விலை அதிகரித்தும் அதற்கு ஒப்பாக விற்பனை விலை

அதிகரிக்காததும், சவர்க்கார விற்பனையால் ஏற்பட்ட நட்டம், ஏனைய வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக மற்றும் விநியோகச் செலவினம் அதிகரித்தமை என்பன நலிவுக்கான பிரதான காரணங்கள் ஆகின.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

---

பீ.சீ.சீ கம்பனிக்குச் சொந்தமான 12 ஏக்கர், 03 றூட், 8.77 பர்ச்சர்ஸ் காணியின் கொழும்பு நீதிமன்ற கட்டிட நிர்மாணப் பணிக்கு 06 ஏக்கரும் சிறைச்சாலைத் தலைமை அலுவலகப் புனரமைப்பு வசதிகளுக்கு வழங்கப்படுவதற்காக ரிமான்ட் சிறைச்சாலையை புனரமைப்பு செய்வதன் பொருட்டு 04 ஏக்கர், வணிக நடவடிக்கைகளுக்கென நகர அபிவிருத்தி அதிகாரச சபைக்கு 02 ஏக்கர், 03 றூட், 8.77 பர்ச்சஸை வழங்குவதற்கு 2015 டிசெம்பர் 17 ஆந் திகதிய அமப/15/1874/702/010, 2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய அமப/16/0597/731/009-1, 2016 யூன் 21 ஆந் திகதிய அமப/2016/1277/724/052 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திரங்களின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உற்பத்தி நடவடிக்கைகளின் பொருட்டு செய்முறைக் கணக்குகளை கம்பனி பேணியிராமையால் 02 உற்பத்தி வகைப் பொருட்களால் ஏற்பட்ட இலாபம் / நட்டம் தொடர்பான தகவல்கள் மற்றும் உற்பத்தியின்போது ஏற்படும் சாதாரண அல்லது அசாதாரண விரயத்தை இனங்கண்டு கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) பாம் எண்ணெய் அடைக்கும் புதிய செயற்திட்டத்தினது எண்ணெய் இயந்திரத்தை நிறுவுவதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 831,858 நிர்மாணப் பணிக்கெனச் செலவிடப்பட்டிருந்தது. எனினும், இவ்வறிக்கைத் திகதி வரை செயற்திட்டம் ஆரம்பமாகாது இருந்தது.

(இ) காலங் கடந்த ரூபா 603,267 பெறுமதியான கையிருப்பைப் பதிவழிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

### 4.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

---

2013/2014 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியை கம்பனி செலுத்துவதற்குத் தாமதம் ஆகியமையால் ரூபா 42,139 தண்டப்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்னர் கம்பனி இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் பங்குகளைப் பெறுவதற்கு ரூபா 100,000 முதலீடு செய்திருந்தபோதும், பங்கிலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) பொது முயற்சிகள் அபிவிருத்தி திணைக்களம் கம்பனியின் பாவனைக்கு வழங்கிய வொல்டோ வாகனம் கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதியளவிலும் ஏறக்குறைய 02 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(இ) 2013 தொடக்கம் தேசிய அபிவிருத்தி வங்கியில் பேணிய நடைமுறைக் கணக்கிலிருந்த ரூபா 1,227,921 மீதியானது 2017 டிசெம்பர் 21 ஆந் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானத்தின்படி நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் பின்னர் இம்மீதிக்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்படவில்லை.

(ஈ) 2018 பெப்ரவரி 07 தொடக்கம் வத்துபிட்டிவல தொழிற்சாலையின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்த கெப் வண்டியினது ஓட்ட அட்டவணையின் பிரகாரம் அது கணக்காய்வுத் தினமான 2018 யூலை 31 வரை 17 நாட்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) தலைமை அலுவலக வளாக நீர் வழங்கல் தேவைகளுக்கென 2017 மே மாதத்தில் ரூபா 91,048 செலவில் ஹியூம் பைப் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2018 யூலை 31 ஆந் திகதியளவிலும் அது பயன்படுத்தப்படாதிருந்தது.

### 4.5 பதவியணி நிர்வாகம்

2006 செப்டெம்பர் 22 ஆந் திகதிய 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் சம்பளத் தொகுதி சம்பந்தமாக கணக்காய்வில் திருப்தியடைய முடியாதிருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், பீசீசீ லங்கா விமிட்டட் மீளாய்வாண்டின் பொருட்டு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச கம்பனிகளும் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்டோபர் 08 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

நிலையான சொத்துக்களது நேரடி உருப்படிச் சரி, பிழை பார்த்தல் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.